**முதன்மைத் தேர்வாளர்கள் / கூர்ந்தாய்வு அலுவலர்கள் / உதவித் தேர்வாளர்களின் கவனக்குறைவால் ஏற்பட்ட தவறுகள் / நிவர்த்தி செய்தல்**

| வ. எண் | முகாமில் ஏற்படும் தவறுகள் | நிவர்த்தி செய்ய வேண்டியனை |
|---|---|---|
| 1 | ஒரு மதிப்பெண் வினாக்களின் விடைகளுக்கு மொத்தமாக மதிப்பெண்கள் வழங்குதல் | உதவித் தேர்வாளர்கள் ஒவ்வொரு விடைக்கும் அதற்குரிய மதிப்பெண் கலத்தில் தனித்தனியாக மதிப்பெண்ணை பதிவு செய்ய வேண்டும் |
| 2 | பக்கவாரியாக வினாவாரியாக மதிப்பெண்கள் எடுத்து எழுதும் போது கூடுதலில் தவறு ஏற்படுதல் | உதவித் தேர்வாளர்கள் / கூர்ந்தாய்வு அலுவலர் பக்கவாரியாக மதிப்பெண் கூடுதலும் வினாவாரியான மதிப்பெண் கூடுதலும் ஒரே மதிப்பெண்ணாக உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் |
| 3 | விடைத்தாளின் வலது பக்க ஓரத்தில் மதிப்பெண் எடுத்து எழுதும் போது தவறு ஏற்படுதல் | உதவித் தேர்வாளர்கள் விடைத்தாட்களில் மேல் வலது பக்க ஓரத்தில் மதிப்பெண் பதிவு செய்து எழுதும் போது மதிப்பெண் சரியாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும், கூர்ந்தாய்வு அலுவலரும் முதன்மைத் தேர்வாளரும் உறுதி செய்ய வேண்டும். |
| 4 | முகப்புத்தாளின் B Part –ல் மதிப்பெண் எண்ணில் மற்றும் எழுத்தில் எழுதும் போது வேறுபடுதல் | உதவித் தேர்வாளர்கள் முகப்புத்தாளின் B Part –ல் மதிப்பெண்ணை எண்ணில் மற்றும் எழுத்தில் எழுதும் போது வேறுபடாமல் இருப்பதை சரிபார்க்க வேண்டும். மேலும், கூர்ந்தாய்வு அலுவலரும், முதன்மைத் தேர்வாளரும் இதனை உறுதி செய்து கொள்ள வேண்டும் |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| வ. எண் | முகாமில் ஏற்படும் தவறுகள் | நிவர்த்தி செய்ய வேண்டியனை |
|---|---|---|
| 5 | தேர்வர் ஒரு பக்கத்தில் விடைகள் ஏதும் எழுதாமல் விடுத்து அடுத்த பக்கத்தில் எழுதிய விடைகளை மதிப்பீடு செய்யாமல் விடுதல் | முதன்மைத் தேர்வாளர்கள் / உதவித் தேர்வாளர்கள் அப்பாடத்திற்குரிய விடைத்தாளில் விடைகள் எழுதியுள்ள அனைத்து பக்கங்களிலும் மதிப்பீடு செய்ய வேண்டும். |
| 6 | மதிப்பெண்களை எழுதும் போது இலக்கம் மாற்றி எழுதுதல் (உ.ம் 71 மதிப்பெண்களுக்கு பதிலாக 17 என எழுதுதல்) | முதன்மைத் தேர்வாளர்கள் / உதவித் தேர்வாளர்கள் / கூர்ந்தாய்வு அலுவலர்கள் மதிப்பெண்களை எழுதும் போது இலக்கம் மாறாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| 7 | விடைத்தாளின் மூன்று கலங்களில் வினா வாரியான / பக்க வாரியான / வலது பக்க ஓரம் ஆகியவற்றில் மதிப்பெண்களின் கூடுதல் தவறாக பதியப்படுதல் | முதன்மைத் தேர்வாளர்கள் / உதவித் தேர்வாளர்கள் / கூர்ந்தாய்வு அலுவலர்கள் மூன்று கலங்களில் வினா வாரியான / பக்க வாரியான / வலது பக்க ஓரம் ஆகியவற்றில் மதிப்பெண்கள் சரியாக பதியப்பட்டுள்ளதை சரிபார்த்தல் வேண்டும். |

www.Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com